உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

**வேதமே ரக்ஷை..**

-------------

<u>ப்ரசுரம் 2</u>

**ஆடி மீ 31உ, வெள்ளிக்கிழமை**

15-8-1947

-------------

# வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

(Regd.)

**கும்பகோணம்.**

-----------------

**(விலை அணா ஒன்று)**

உ

ஶ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# வேதமே ரக்ஷை..

-----o-----

பதினான்கு உலகங்களும் ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யத்திற்கு ஒரு சக்ரவர்த்தி. அந்தச் சக்ரவர்த்திக்கு எல்லா ஜீவராசிகளும் பிரஜைகள். ராஜ்யமும் அனாதி. சக்ரவர்த்தியும் அனாதி. ஆனால் ராஜ்யமும், சக்ரவர்த்தியும், பிரஜைகளும் இருந்தால் அதற்கு ஒரு சட்டம் வேண்டும். இவைகள் எல்லாம் அனாதியானால், சட்டமும் அனாதி. அந்த அனாதி சட்டமே வேதம். உலகம் உற்பத்தி ஆகிறது, வளர்கிறது, பிரளயம் அடைகிறது. திரும்பவும் உற்பத்தி ஆகிறது, பிரளயம் அடைகிறது. இப்படியே சுற்றிக்கொண்டிருக்கிறது. சக்கரவர்த்தியும் சட்டமும் மாத்திரம் ஸ்திரம். ஒவ்வொரு ஸ்ருஷ்டியின் ஆரம்பத்திலும் அந்தச் சக்கரவர்த்தி அதிகார புருஷர்களைச் சிருஷ்டி செய்கின்றான். அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய யோகசக்தியைக் கொடுக்கிறான். அந்த யோக சாஸ்திரத்தில் தன் ச்ரோத்திரத்திற்கும் வெளி ஆகாசத்திற்கும் அபேதமான ஒரு ஸம்யமும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதை அனுஷ்டிக்கும்போது திவ்ய ச்ரோத்திரம் கிடைக்கிறதாம். அந்த திவ்ய ச்ரோத்திரத்தைக் கொண்டு வெளி ஆகாசத்தில் ஸ்திரமாய் கிடக்கும் அநாதி சப்த அலைகளை ஈசனுடைய அருள் ஸகாயத்தால் அந்த அதிகார புருஷர்கள் அடைகிறார்கள். அவர்களே முதல் முதலில் வேதத்தை அறிந்தவர்களாகிறார்கள். அவர்களே மந்திரத்திற்கு மகரிஷிகள். வேதாத்யயனம் ஒரு மந்திர யோகம். ஒவ்வொரு நாடி அசைவதினால் சித்தத்திற்கு ஒவ்வொரு விதமான விகாரங்கள் ஏற்படுகிறது. சில நாடிகளால் காம விகாரங்களும், சில நாடிகளால் சோம்பல் விகாரங்களும், சில நாடிகளால் சோகவிகாரங்களும் உண்டாகின்றன. இதை மாற்றிச்சொல்லில், காம விகாரம் ஏற்படும்போது சில நாடிகளில் அசைவும், போகவிகாரத்தினால் சில நாடிகளில் அசைவும், அனுபவத்தில் காணப்படுகின்றன். சாந்தம் ஏற்படும்போது முகத்தில் ஒரு களை உண்டாகிறது. அந்தக்களை சில நாடிகள் குளிர்ந்ததின் பலன். இவ்விதம் மனோ விகாரங்களால் நாடிகளின் சில விகாரங்கள் ஏற்பட்டால், மனோ விகாரத்தின் சாந்தத்தால் குளிர்மை ஏற்பட்டால், அந்த நாடிகளை வசப்படுத்தி விட்டால், காமக்குரோதங்களையோ, சாந்தத்தையோ நமது இஷ்டப்படி வரவழைத்துக்கொள்ளலாம். அதற்கு வெளிப்பொருள்கள் தேவை இல்லை. இப்படி நாடிகளை ஸ்வாதீனப்படுத்த ப்ராணாயமத்தை முக்கியமாகக் கொண்ட ஹடயோகம் ஒரு மார்க்கம். அதேவிதமாய் மந்திர யோகமும் ஒரு மார்க்கம். ஒரு எழுத்தை நாம் உச்சரிக்கும்போது நமது நாக்கு, உதடு, மேல்வாய், கீழ்வாய், கண்டம் முதலியவைகளில் இடைவழியாக ப்ராணவாயு வெளிப்படுகிறது. அப்பொழுதுதான் அக்ஷரத்வனி உண்டாகிறது. அந்த அக்ஷரத்வனிக்குக் காரணமாக எந்தெந்த உறுப்புக்களில் ப்ராணவாயு ஸஞ்சரிக்கிறதோ அந்தந்த இடம் ஸம்பந்தப்படும் நாடிகளில் சலனம் ஏற்படுகிறது. எந்தெந்த நாடிகளில் சலனத்தினால் மனதின் எவ்வெவ்விதமான விருத்திகள் ஏற்பட்டு இகலோக க்ஷேமமும், பரலோக க்ஷேமமாகிய மோக்ஷம் முதலிய புண்யமும், சாசுவதமான பலன் ஏற்பட வேண்டுமோ அதற்கு

அனுகுணமான உச்சாரணங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு வேறு விதமாக உச்சாரணங்களை விலக்கி அமைந்தனவே வேத மந்திரங்கள்.

அவைகளின் ஆவ்ருத்தியால் எந்தெந்த நாடிகளில் திருப்பித் திருப்பிச் சலனம் ஏற்பட்டு ஆத்ம க்ஷேமம் கிட்டுமோ அந்த க்ஷேமத்தைத் தானும் அடைந்து, தன் மந்திரசக்தியால் உலகத்தோரும் க்ஷேமம் அடையச் செய்வதே வேதியரின் கடமை. இதுவே அவர்களின் பிறவிக் கடமையும் கூட. ஒவ்வொருவருக்கும் ஒரு பிறவிக்கடமை இருக்கிறது. ஒவ்வொருவரும் தம் பிறவிக்க்டமையைத் தவறாமல் செலுத்தி, அதன் பயனைமாத்திரம் எல்லோரும் அடையும்படி செய்வதே சாஸ்திர முறை.

## ஏன் வேதாத்யயனம் செய்யவேண்டும்?

மற்றெல்லாக் காரியங்களையும் காரணத்தைக் கேட்டுக் கேட்டுச் செய்கிறோமா? காரணத்தைக் கேளாமல் பிறப்புரிமையாய் ஒரு காரியத்தையாவது செய்வோமே. அப்படிச் செய்யவேண்டிய காரியந்தான் வேதாத்யயனம். "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்றாள் ஔவை. தினம் வேதியர்கள் ப்ரம்ம யக்ஞம் செய்யவேண்டியதைப்பற்றி ஏற்பட்டது இந்த வசனம். "ஓதல்" என்றால் வேதம் ஓதுவதே. வேதத்திற்கு "ஓத்" என்ற ஒரு பெயரும் உண்டு. "வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை" என்ற பழபொழியிலும் இதைக் கண்டுளோம்.

இறுதியில் மகரிஷிகளின் சூத்ரங்களைப் பார்ப்போம்.

ஞாஹணெந நிஷ்காரணெந ஷஊஜீமொ வெஹொzீயெ்யொ ஜ்ஞெயஶ்ச

ब्राह्मणेन निष्कारणेन षडङ्गो वेदोऽद्ध्येयो ज्ञेयश्च

ஆறு அங்கங்களோடு கூடிய வேதத்தைக் காரணம் கேளாமல் வேதியன் ஓத வேண்டும், அதன் பொருளை அறியவும் வேண்டும், என்பது இந்த சூத்ரத்தின் கருத்து.

மனு கீழ்வருமாறு சொல்லுகிறார்:-
"ஓதலில்லா வேதியன் மரத்தால் செய்யப்பட்ட யானைக்கு ஒப்பானவன். வேதமோதிய வேதியனே உண்டையான சாந்தகுணமுள்ள யானை". மற்றும் மனு சொல்லுகிறார்:-
"வேதத்தையும் ஆவ்ருத்தி செய்துகொண்டு, சோம்பலின்றி, ஆசாரசுத்தியும், அன்ன தோஷமுமில்லாமலிருந்தால், மேலே கண்ட குணம் ஒரு வேதியனுக்கு இருந்தால் அவனை ம்ருத்யு அணுகான்." வேதமே வேதியனுக்கு நிதி. அந்த நிதி அழியாமலிருந்தால் வேதியர் குலம் என்றும் அழியாமல் மேன்மேலும் வளர்ந்தோங்கும். சில பேர்கள் "வேதத்தை நம்பமுடியுமா? அதற்கு ஒரு யுக்தி சொல்லுங்கள்" என்று கேட்கிறார்கள். யுக்திக்கு எட்டுமானால் அதை வேதம் சொல்லுவானேன். யுக்திக்கு எட்டாததைச் சொல்லத்தான் வேதம் இருக்கிறது. வேதம் நித்யமானது. அதைத் திவ்விய திருஷ்டி உள்ள முனிவர்கள் அறிந்து நமக்குச் சொன்னார்கள். எதை ருசுவினால் (Proof ) நிரூபிக்க முடியாதோ, எங்கே புத்தி

எட்டலில்லையோ, அதற்காகத்தான் வேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்திரியங்களுக்கு அகப்படாததை விளக்குவது வேதம்.

இவ்வளவு தூரம் கேட்டதற்குப் பிரயோஜனமாக எல்லாரும் ஏதாவது ஒரு காரியம் பண்ணவேண்டும். பிராமணர்கள் பிரம்ம யக்ஞம் அவ்சியம் பண்ணவேண்டும். பஞ்சமஹா யக்ஞங்களில் அது ஒன்று. 'பிரம்ம' என்பது வேதம். அகண்டதீபம் போல் மந்திரசக்தியானது நம்மிடம் அணையாமலிருப்பதற்காக நாம் அதைச் செய்யவேண்டும். நாம் அத்யயனம் செய்யவேண்டிய சாகையில் மகரிஷி யாரோ அவர்க்குத் தர்ப்பணம் பண்ணவேண்டும். பண்ணிவிட்டு இரண்டு அக்ஷரமாவது வேதாத்யயனம் பண்ணவேண்டும். காயத்ரீ வேதத்தின் ஸாரமானது. காயத்ரியை உபதேசம் பண்ணிகொண்ட பிறகுதான் வேதாக்ஷா உச்சாரணம் செய்யவேண்டும், என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய காயத்ரியை ஸஹஸ்ராவிருத்தி முக்கியமாக தினந்தோறும் செய்ய வேண்டும். கடைசி பக்ஷம் பத்தாவிருத்தியாவது செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காயத்ரீ மந்திரம் சித்த சாந்திக்குக் காரணம். அதனுடைய தேவதை சூரியன். சூரியனுக்கு உரிய நாளாகிய ஞாயிற்றுக்கிழமை, இந்தக்காலத்தில் எல்லாருக்கும் விடுமுறை நாளாயிருக்கிறது. ஆகையால் அன்று 4 மணிக்கு எழுந்து, ஸ்நானம் செய்துவிட்டு, ஸஹஸ்ராவிருத்தி காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். செய்தால் க்ஷேமம் உண்டாகும்.

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.

---

Veda Dharma Sastra Paripalana Sabha was commenced with the Blessings of Pujyasri Chandrasekharendra Saraswathi Shankaracharya Swamiji in the year 1942 with the objective of protecting and propagating the Dharmas through various means including publications. The Sabha is continuing to perform various activities like conducting Veda Sammelans and Vidwat Sadas etc. in various towns and cities, with the Blessings of Pujyasri Jayendra Saraswathi Shankaracharya Swamiji and Pujyasri Sankara Vijayendra Saraswathi Shankaracharya Swamiji.

As ordained by His Holiness Sri Sankara Vijayendra Saraswati Swamigal, Shri Kanchi Kamakoti Peetham, reprinted by Sri V.N.Gopalakrishna Rao. Similar articles including this reprint can be accessed at Kanchi Kamakoti website: http://www.kamakoti.org/tamil/